# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***SESSIONS CASE NO. 495/2022***

Deposition of Witness for Prosecution :: **P.W.20**

| | | |
|---|---|---|
| பெயர் | – | பத்மநாபபிள்ளை |
| தந்தை பெயர் | – | |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| வயது | – | |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tr. P.Maridoss in accordance with the Provisions of Act X of 1873 on **the 21st day of June 2025.**

(Accused not present. Petition filed through e-filing and allowed. )
(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன் தாழையூத்து காவல்நிலையத்தில் பணிபுரிந்தபோது 01.7.2022 ம் தேதி உதவி ஆய்வாளர் கார்த்திகேயன் அவர்கள் பதிவு செய்த தாழையூத்து காவல்நிலைய குற்ற எண்.164/2022 சட்டப் பிரிவு 174 crpc (suspicious death) வழக்கினை பதிவு செய்து எனது விசாரணைக்கு வைத்ததை அன்றையதினம் எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 16 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வேலு, பூல்பாண்டியன் என்பவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.24. அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்து புளூ மற்றும் ரோஸ் கலரில் உள்ள பிளாஸ்டிக் வயர் கூடை ஒன்று, மஞ்சள் கலர் நைலான் கயிறு ஒன்று, இறந்தவரின் உடலில் இருந்து வடிந்த ஊன்படிந்த மண் கொஞ்சம், ஊன்படியாத மண் கொஞ்சம் ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி ஏற்கனவே அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புளூ மற்றும் ரோஸ் கலரில் உள்ள பிளாஸ்டிக் வயர் கூடை ஒன்று சா.பொ.2 ஆகவும், மஞ்சள் கலர் நைலான் கயிறு ஒன்று சா.பொ.3 ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் அத்தாட்சி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் செந்தில்முருகன், தனுஷ்கோடி, புஷ்பம், பழனி, உதவி ஆய்வாளர் கார்த்திகேயன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 02.7.2022ம் தேதி காலை 10.30 மணிக்கு திருநெல்வேலி மருத்துவ கல்லூரி மருத்துவமனை சவக்கிடங்கு அருகில் வைத்து பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தேன். நான் செய்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.25. மேலும் இறப்பின் காரணம் அறியும் பொருட்டு வேண்டுகோள் கடிதத்துடன் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி காவலர் பாபு என்பவர் மூலம் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் பிரேத விசாரணை அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சாட்சிகள் தனுஷ்கோடி, புஷ்பம், பழனி, செல்லத்துரை, மகாராஜன் ஆகியோர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்தேன். அந்த வாக்குமூலங்களில் இருந்து மாரிமதன் என்பவர் இறந்து போன மாயாண்டியை கடைசியாக கூட்டிப் போனதாக தெரிய வந்தது. மாரிமதனை தேடி சென்றபோது அவரை காணவில்லை. அவரை பிடிக்க வேண்டி துப்பு வைத்தேன். 02.7.2022ம்

தேதி கீழ தென்கலம் தெற்குமலையில் வாகன தணிக்கை செய்தபோது 16.30 மணி அளவில் மேற்கிருந்து கிழக்கு நோக்கி வந்த TN 72 BQ 1518 TVS XL 100 Heavy Duty வாகனத்தை ஓட்டி வந்தவர் பைக்கினை திருப்பி ஓட முயன்றபோது மடக்கிப் பிடித்து விசாரிக்க எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதால் அவரை கைது செய்து ஆஜர் சாட்சிகள் இசக்கிமுத்து, கண்ணையா ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அதில் எதிரி தன்னை அழைத்து சென்றால் தான் மாயாண்டியை பைக்கில் கூட்டிச் சென்ற வழியையும், சம்பவ இடத்தையும் அடையாளம் காட்டுவதாகவும், சம்பவ இடத்திற்கு பக்கத்தில் முள்செடிக்குள் மறைத்து வைத்துள்ள ரத்தக்கறை படிந்த கருங்கல்லை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்வதாகவும் கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.26. இவ்வழக்கின் சாட்சிகளின் வாக்குமூலத்தில் இருந்தும், எனது விசாரணையில் இருந்தும், எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 26.06.2022 ம் தேதி சுமார் 1 மணி அளவில் மாயாண்டியிடம் இருந்து பணத்தை கொள்ளையடிக்கும் நோக்கத்தோடு தச்சநல்லூர் பைபாஸ் ரோட்டில் இருந்து மாயாண்டியின் பைக்கில் மாயாண்டியை கடத்திச் சென்று சங்கர் நகர் ஹவுசிங்போர்டு phase 2-ல் மேற்கு பக்கம் வைத்து தலையில் கல்லால் அடித்து கொலை செய்து விட்டு மாயாண்டி வைத்திருந்த ரூ.8,000/- மற்றும் TN 72 BQ 1518 என்ற பதிவெண் கொண்ட புளூ கலர் TVS XL 100 Heavy Duty பைக் ஆகியவற்றை பறித்துக் கொண்டு சென்றுள்ளதாக விசாரணையில் புலனானது. எனவே 17.45 மணிக்கு சட்டப் பிரிவை 174 Crpc (suspicious death)லிருந்து 302, 392 இதசவாக

சட்டப் பிரிவை மாற்றம் செய்து சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கையை 18.45 மணிக்கு முதல்நிலை காவலர் 537 மாரிகுமார் என்பவர் மூலம் துரித தபாலாக குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3 திருநெல்வேலிக்கு அனுப்பி வைத்தேன். சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.27. 18.45 மணிக்கு மாரிமதனின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் மாயாண்டியிடம் கொள்ளையடித்த TN 72 BQ 1518 என்ற பதிவெண் கொண்ட புளூ கலர் TVS XL 100 Heavy Duty பைக் மற்றும் கொள்ளையடித்த பணத்தில் மீதமிருந்த ரூ.1,500/- ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 19.15 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான ஹவுசிங்போர்டு காலனி phase 2 ல் மேற்கு பக்கம் எதிரி மறைத்து வைத்திருந்த இரத்தக்கறை படிந்த சுமார் 3-1/2 கிலோ எடையுள்ள கருங்கல்லை எதிரி எடுத்து ஆஜர் செய்ததை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அந்த அத்தாட்சி ஏற்கனவே அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி ஆஜர் செய்த கருங்கல் தற்போது என்னிடம் காட்டப்படுவது தான். அது சா.பொ.5 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. 20.30 மணிக்கு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து நிலைய பதிவேடுகளில் பதிவு செய்து பாரா வசம் ஒப்படைத்தேன். சாட்சிகள் இசக்கிமுத்து, கண்ணையா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 03.7.2022ம் தேதி எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். 04.7.2022ம் தேதி சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்ய வேண்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு

வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். அந்த வேண்டுகோள் கடிதத்தின் படி 05.7.2022ம் தேதி தொழில்நுட்ப உதவியாளர் புன்னைவனம், சிசிடிவி டெக்னிசியன் ஜோபர்ட் ஷாம்துரை என்பவர்கள் சகிதம் தச்சநல்லூர் – தாழையூத்து மெயின்ரோட்டில் உள்ள மதுபானக்கடை எண் 10654 கடையில் உள்ள சிசிடிவி கேமராவை ஆய்வு செய்து 26.6.2022ம் தேதி நேரம் 15.06.36 முதல் 15.40.15 வரை உள்ள பதிவுகளை சேகரித்தும், பின்னர் சிதம்பர நகர் பாலசுப்பு என்பவர் வீட்டில் உள்ள சிசிடிவி கேமராவை ஆய்வு செய்து 26.6.2022ம் தேதி நேரம் 15.05.50 முதல் 15.05.59 வரை உள்ள பதிவுகளை சேகரித்தும், பின்னர் ஜெயேந்திரசுவாமிகள் வித்யாலயா பள்ளி விடுதி அருகில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை 15.26.29 நேரம் முதல் 15.26.79 நேரம் வரை உள்ள பதிவுகளை சேகரித்து DVD மற்றும் pendrive ல் பதிவு செய்தோம். 12.07.2022ம் தேதி வழக்கின் சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு தடயங்களை மற்றும் எதிரியிடம் கைப்பற்றப்பட்ட பணம், இருசக்கர வாகனம், இறந்தவரின் உடலில் இருந்து கைப்பற்றப்பட்ட சாரம், ஜட்டி, சட்டை ஆகிய வழக்குச் சொத்துக்களை நீதிமன்றத்திற்கு படிவம் 91 மூலம் அனுப்பி வைத்தேன். படிவம் 91 அ.சா.ஆ.28. 20.07.2022ம் தேதி வழக்கு சொத்துக்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டி நீதிமன்றத்தில் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். இறந்த மாயாண்டியின் புகைப்படத்தை மாயாண்டியின் மனைவி புஷ்பம் என்பவரால் நிலையத்தில் ஒப்படைத்து நிலைய பாதுகாப்பில் இருந்ததை மாயாண்டியின் உடலில் இருந்து சேகரிக்கப்பட்டு மருத்துவமனை பாதுகாப்பில் இருந்த மண்டை ஓட்டுடன் ஒப்பீடு செய்ய வேண்டி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதே தினத்தன்று சிசிடிவி கேமரா

பதிவுகளை சேகரிக்க உதவிய தொழில்நுட்ப உதவியாளர் புன்னைவனம், ஜோபர்ட் ஷாம்துரை ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர்களிடமிருந்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65B படி சான்றிதழ்களை பெற்றேன். சேகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் மற்றும் டிவிடி மற்றும் பென்டிரைவ் ஆகியவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் நான் 20.07.2022ம் தேதி பணி மாறுதலாகி சென்றுவிட்டதால் வழக்கு கோப்பை காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

அ.சா.ஆ.1 புகாரில் அடையாளம் தெரியாத ஆண் பிரேதம் கிடப்பதாக தகவல் கிடைத்ததாகத் தான் கூறப்பட்டுள்ளது. அதே புகாரில் ஒரு ஆண் பிரேதம் கை, கால்கள் அரைகுறையாக மிருகங்களால் கடித்த நிலையில் அரைநிர்வாணமாக அழுகிய நிலையில் கிடந்ததாக கூறப்பட்டுள்ளது. அதே போல் சடலத்தின் மீது லைட் ரோஸ் கலர் கோடு போட்ட முழுக்கை சட்டை காணப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. சடலத்திற்கு அருகில் புளூ மற்றும் வெள்ளை கலரில் பிளாஸ்டிக் வயர் கூடையும், ஆடுகட்டும் பிளாஸ்டிக் கயிறும் காணப்படுவதாக கூறப்பட்டுள்ளது. புகாரில் இறந்து போனவரின் விவரம் தெரியவில்லை என்று கூறப்பட்டுள்ளது. புகாரில் அறிவேன் சாட்சி யாரும் இல்லை. பார்வை மகசரில் சம்பவ இடத்திற்கு அருகில் புளூ மற்றும் ரோஸ் கலரில் வயர் கூடையும், மஞ்சள் கலர் ஒரு நைலான் கயிறு ஒன்றும் இருந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு சென்றதாக சொல்லப்படும் நேரத்தில் பிரேதம் அங்கு தான் கிடந்தது. பார்வை மகசரில் இறந்த பிரேதத்தின் தலை, கை, கால்கள் எந்தெந்த திசையை நோக்கி இருந்ததாக கூறப்படவில்லை என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் பிரேதம் அந்த இடத்தில் இருந்ததாக

குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தச்சநல்லூர் காவல்நிலைய Man missing சம்பந்தமான FIR எதுவும் நான் பார்க்கவில்லை. இந்த வழக்கின் FIR ல் சம்பவ நேரம் 01.7.2022 ம் தேதி 12.30 மணி என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிலையத்திற்கு தகவல் கிடைத்த நேரம் 01.7.2022 ம் தேதி 15 மணி என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த புகாரில் அவருக்குக் கிடைத்ததாக கூறப்பட்டுள்ள தகவல் அவருக்கு யார் கொடுத்தார்கள் என்ற விவரத்தை நான் விசாரிக்கவில்லை. முதல் தகவல் அறிக்கை காலம் எண்.5 ல் சங்கர் நகர் ஹவுசிங்போர்டு phase 2 மேற்குபக்கம் என்று தான் கூறப்பட்டுள்ளது. குறிப்பிட்டு அது எந்த இடம் என்று கூறப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் எண்.15 ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட தேதி மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாழையூத்து காவல்நிலையத்தில் இருந்து நீதிபதி குடியிருப்பிற்கு 1 மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் பஸ் கிடைத்தால் 1–1/2 மணி நேரத்தில் வந்துவிடலாம். முதல் தகவல் அறிக்கையில் அது நீதித்துறை நடுவரால் 02.7.2022 ம் தேதி 11.20 மணிக்கு பெற்றதாக மேற்குறிப்பு உள்ளது என்றால் சரிதான். இறந்து போனவரின் புகைப்படத்தை அவரது மனைவியிடம் இருந்து எந்த தேதியில் வாங்கியதாக வழக்குக் கோப்பில் துலங்கும் என்றால் 3 ம் தேதி வாங்கியதாக உள்ளது. அவ்வாறு 3 ம் தேதி வாங்கியதாக வழக்குக் கோப்பில் துலங்காது என்றால் சரிதான். super imposition test அறிக்கைபடி the person identified of the male individual seen in photo item 1 could not be established என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை நான் பார்க்கவில்லை. மேற்படி அறிக்கை காரணமாக இறந்துபோன நபர் மாயாண்டி தானா என்பதே சந்தேகத்திற்கு இடமானது என்றால்

சரியல்ல. சங்கர் நகர் ஹவுசிங்போர்டு பகுதி கல்குவாரிகள் நிறைந்தது என்றும், கல்குவாரிக்கு போகும் வழி என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு கோப்பில் கல்குவாரிகள் இருப்பதாக துலங்கினால் அது பொய் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகில் வெல்கம்பாய் என்பவரது வீடு சுமார் 200 மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் புது வீடு ஒன்று கட்டப்பட்டு கொண்டிருந்தது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் 3, 4 உடை மரங்கள் இருப்பதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட கருங்கல்லை தடய அறிவியல் ஆய்வுக்கு நான் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ.5 அத்தாட்சியில் எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்ததாக கூறப்படும் கருங்கல் சம்பவ இடத்திற்கு எந்த திசையில் இருந்த முட்புதரில் இருந்து எடுத்து ஆஜர்செய்யப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். TN 72 BQ 1518 என்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் யார் என்பதை விசாரித்தேன். ஆனால் வாங்கவில்லை. பிரேத விசாரணை அறிக்கையில் காலம் எண்.5 ன் படி இறந்துபோனவரை கடைசியாக பார்த்தவர் பெயர் சண்முககனி என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவரை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வைத்து பிரேத விசாரணையை நடத்தாமல் மறுநாள் மருத்துவமனையில் வைத்து பிரேத விசாரணை நடத்தியதற்கு குறிப்பாக காரணம் உண்டா என்றால் இறந்தவர் அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்பதாலும், பிரேதமானது விலங்குகளால் சேதப்படுத்தக்கூடும் என்பதாலும் மறுநாள் பிரேத விசாரணையை நடத்தினேன். சம்பவ இடத்திற்கு சென்றபோது பிரேதம் அந்த இடத்தில் இல்லை என்றும், அதனால் தான் அதை குறித்து

பார்வை மகசர், வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றும் பிரேத விசாரணை அங்கு வைத்து நடத்தப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இறந்தவரின் மனைவியை விசாரித்தபோது அவர் ஏற்கனவே தன் கணவரை காணவில்லை என்று தச்சநல்லூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த விவரத்தை என்னிடம் சொல்லவில்லை. நான் இறந்தவரின் மனைவியை விசாரித்தபோது கடைசியாக மாரிமதன் இறந்து போன மாயாண்டியுடன் சென்றதாக என்னிடம் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் சிசிடிவி பதிவு கோரி கொடுத்த வேண்டுகோளின் படி பென்டிரைவ், டிவிடி ஆகியவை எனக்கு 20ம் தேதி கொடுக்கப்பட்டது. மேற்படி சிசிடிவி பதிவுகளை புஷ்பம் உள்ளிட்ட மற்ற சாட்சிகளுக்கு நான் போட்டு காட்டவில்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சிசிடிவி பதிவு பெறப்படவில்லை என்றும், அதனால் தான் அதனை நான் போட்டுக் காட்டவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் பிரேத விசாரணை செய்யும்போது பிரேதத்தின் உடலில் எந்த பாகமாவது இல்லாமல் இருந்ததா என்றால் இல்லை. எல்லா பாகங்களும் இருந்தது (சாட்சி தானாக இரண்டு கால்களில் கடிக்கப்பட்டு இருந்து எலும்பு தெரிந்தது என்று சொல்கிறார்.). பார்வை மகசரில் பிரேதம் அழுகிய நிலையில் இருந்ததாகவோ, அதிலிருந்து துர்நாற்றம் வீசியதாகவோ கூறப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கையை பெற்று புலன் விசாரணையை தொடங்கியதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு சென்றதாகவும், அங்கு வைத்து அ.சா.ஆ.6, அ.சா.ஆ.24 தயாரித்ததாகவும் சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் அத்தாட்சி

பிறப்பித்து சொத்துக்களை கைப்பற்றியதாக சொல்வதும், பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்ததாக சொல்வதும் உண்மையில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்ததாக சொல்வதும், எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்வதும், அதன் அடிப்படையில் சொத்துக்களை கைப்பற்றியதாக சொல்வதும் உண்மையில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சாட்சிகளையும் விசாரிக்காமல் விசாரித்ததாக ஆவணங்களை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சிசிடிவி பதிவுகளில் உள்ள நேரமானது முதலில் உள்ளது மணியையும், இரண்டாவது உள்ளது நிமிடத்தையும், மூன்றாவது உள்ளது நொடியையும் குறிக்கும் என்றால் சரிதான். மணியை குறிக்கும் காலம் 00 – 24 என்றால் சரிதான். நிமிடம், நொடி ஆகியவற்றை குறிக்கும் காலம் 00–59 என்றால் சரிதான். சிசிடிவி பதிவுகள் வழக்கிற்காக பின்னிட்டு உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சட்டப் பிரிவை மாற்றியதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிக்கும் எந்தவித சம்பந்தம் கிடையாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை